வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 01.07.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 182 பக்கங்கள் : 12

# செம்மணி போராட்டக் களத்தில் சில சாக்கடை அரசியல்வாதிகள்

## சபையில் சாடினார் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜூலை 01

**செம்மணி போராட்ட களத்தில் ஏற்பட்ட அசம் பாவிதத்துக்கு அரசியல் சாக்கடையில் இருக் கின்ற ஒரு சில அரசியல்வாதிகளின் செயல் பாடே காரணம் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற அமர் வில் நேற்று திங்கட் கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- செம்மணிப் புதைகுழிப் பிரச்னை என்பது மிக முக்கியமான பிரச்னை. கிருஷாந்தியின் கொலை என்பது பல வருடங்களாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இதற்கு நீதி கிடைக்க வேண்டும்.

செம்மணி புதைகுழி யில் நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் வெளி வந்து கொண்டிருக்கின் றன. இந்தப் புதை



குழியில் புதைக்கப்பட்ட உடல்களை பரிசோதனை செய்வதற்கான இயந்திரங்களைப் 11

# இசைப்பிரியா, பாலச்சந்திரன் மரணம் குறித்து முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 01

முன்னாள் போராளி இசைப்பிரியா, புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாலச்சந்திரன் ஆகியோரின் மரணம் தொடர்பான முறைப்பாடு கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் உள்ள சட்டப் பிரிவு அலுவலகத்தில் அதிகாரபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனுக ரணஞ்சக கஹந்தகமகே எனும் சட்டத்தர ணியால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ள துடன், இது குறித்து அறிவிப்பை சட்டத்தரணி தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். 11

# மின்சார திருத்த சட்ட மூலத்தின் சரத்துகள் அரசமைப்புக்கு முரண்

## பாராளுமன்றத்தில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

உத்தேச மின்சார திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஸ்வி சாலிஹ் பாராளுமன் றத்துக்கு தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்ட போது, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்மொழியப்பட்ட உத்தேச மின்சார திருத்த சட்டமூலத்தின் சில பிரிவுகள் திருத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியா னம் வழங்கியுள்ளது. அத்துடன் மின்சார திருத்த 11

# வர்த்தக அமைச்சர் மீது முறைப்பாடு!

கொழும்பு, ஜூலை 01

வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட் டுறவு அபிவிருத்தி அமைச் சர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் நேற்று குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது.

உப்பு இறக்குமதியில் மோசடி நடந்ததாகக் குற்றம் சாட்டி, பல சிவில் சமூக அமைப்புகளால் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவிடம் இந்த முறைப் பாடுகள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளன.

சுமார் 75 ரூபாய்க்கு 11

# எரிபொருள்களின் விலை மீண்டும் எகிறியது

கொழும்பு, ஜூலை 01

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளி ரவு முதல் அதிகரிக்கப் பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.

இந்நிலையில், லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற் றரின் விலை 15 ரூபா யால் அதிகரிக்கப்பட் டுள்ள நிலையில், அதன் புதிய விலை 289 ரூபா யாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாயால் அதிகரிக்கப் பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 185 ரூபாயாகும்.

92 ஒக்ரேன் பெற் றோல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாயால் அதி கரிக்கப்பட்டு, புதிய விலை 305 ரூபாயாக உள்ளது. 11

# கிளிநொச்சியில் கஞ்சாவுடன் குடும்பப் பெண் கைதாகினார்

கிளிநொச்சி, ஜூலை 01

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று கொழுந்துப்புலவு பகுதியில் வீடொன்றின் பின்புறமாக மறைத்து வைத்திருக்கப் பட்டிருந்த நிலையில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

79 கிலோ 245 கிராம் நிறை கொண்ட கேரளா கஞ்சாவை இவ்வாறு தர்மபுரம் பொலிஸார் மீட்கப்பட்டுள்ளதுடன், வீட்டு உரிமையாளரான 55வயதுடைய பெண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான விசுவமடு கொழுந்துப்புலவு பகுதியை சேர்ந்த பெண்ணை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி 11

# 3 வயது குழந்தை பஸ் மோதி பலி!

மட்டக்களப்பு, ஜூலை 01

மட்டக்களப்பு, ஆரையம்பதி - காளி கோவில் வீதியில் பஸ் மோதி 3 வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

ஆடைத்தொழிற் சாலைக்கு வேலைக்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏற முற்பட்ட தாய்க்குப் பின்னால் சென்ற 11

# பொய் கூறுகிறது அரசு

## சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 01

தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களை போலவே பொய்களையும் ஏமாற்றுதல்களையும் செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்தியில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்- நுண், சிறிய மற்றும் நடுத்தர 11

# அதிகாரத்துக்காக அனைத்தையும் காட்டிக் கொடுக்கிறது அநுர அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஜூலை 01

அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் தேசிய மக்கள் சக்தி இன்று அர சியல் விலைமாதுவாகியுள்ளது. அதிகாரத்துக்காக அனைத்தை யும் காட்டிக் கொடுக்கும் நிலைப்பாட்டையே இந்த அரசாங்கம் பின்பற்றுகின்றது. இந்த அரசாங்கம் குண்டர் கும்பலை உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி அராஜகத்திலும் ஈடுபடுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி 11

# குறி சொல்லும் கோவிலில் உயிரிழந்த குடும்பஸ்தர்!

யாழ்ப்பாணம், ஜூலை 01

குறி சொல்லும் கோவில் ஒன்றுக்கு பிணி தீர்க்க சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரி ழந்தார். அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வராசா ஜெசிந்தன் (வயது 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தர் சுகயீனமற்று காணப்பட்ட நிலையில் அராலி மத்தியில் உள்ள குறி சொல்லும் கோவிலுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் அங்கிருந்த சாமியார் அவரது பிணியை போக்குவதாக கூறி இளநீர் ஒன்றை வழங்கியுள்ளார்.

அந்த இளநீரை குடித்த சிறிது நேரத்தில் குறித்த குடும்பஸ்தர் மயக்கி விழுந்து அந்த இடத் திலேயே உயிரிழந்தார். பின்னர் அவரது 11

# எதிர்கால அபிவிருத்திக்கான திட்டங்கள் அரசிடம் இல்லை!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 01

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை குறைவின்றி நிறைவேற்றுகிறது. எதிர்கால அபிவிருத்திக்கான எவ்வித திட்டங்களும் அரசாங்கத்திடம் கிடையாது. ஆட்சிக்கு வந்ததன் பின்னரும் எதிர்க்கட்சிகளை போன்று கடந்த கால அரசாங்கங்களை விமர்சிப்பதை முன்னிலைப் படுத்தியே அரசாங்கம் செயல்படுகிறது என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி விபத்தில் 5 பேர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 01

கிளிநொச்சியில், பூநகரி - மன்னார் வீதியின், பூநகரி தம்பிராய் பகுதியில் இடம் பெற்ற விபத்தில், இரண்டு சிறுமிகள் உட்பட ஐந்து பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தம்பிராய் பகுதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் வீதியை கடக்க முற்பட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் விபத்தை தவிர்ப்பதற்காக மற்ற திசைக்கு திருப்பிய போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்ததினால் ஹைஏஸ் வாகனமும் தீப்பற்றியது.

மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் பயணித்த நிலையில் எரிகாயங்களுடன் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் மோட்டார் சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்ட தாயும் மகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, இரண்டு சிறுமிகள், இரண்டு பெண்கள், ஓர் ஆண் என ஐந்து பேர் பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பூநகரி பொலிஸார், ஹயஸ் வாகன சாரதியை கைது செய்துள்ளனர். (அ)

# தீப்பிடித்து எரிந்த வீடு!



வவுனியா, ஜூலை 01

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் வீடொன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

குறித்த வீட்டின் சாமி அறையில் விளக்கு ஏற்றுவதற்காக தேங்காய் எண்ணெய்க்கு பதிலாக தவறுதலாக பெற்றோலை பயன்படுத்தியமையாலேயே அனர்த்தம் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் பொதுமக்களின் உதவியுடன் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# “மக்களின்மீது பெரும் சுமை!”

கொழும்பு, ஜூன் 01

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் நாட்டுக்குள் எவ்வளவு டொலர்களை செலவிடுகிறார்கள் என்பதை கண்காணிக்க ஒரு முறையான வழிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்தாலும் அவர்கள் நாட்டில் செலவிடும் டொலர்களைக் கண்காணிக்க எந்த முறைமையும் இல்லை. குறைந்தளவில் செலவிடும் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஊடாக இலங்கை மக்கள் மீது பெரும் சுமை சுமத்தப்படுகின்றன.

இதன்படி, இதற்கு தீர்வாக உடனடியாக டிஜிற்றல் அடையாள எண் வழங்கப்பட வேண்டும், மேலும் சுற்றுலா பயணிகள் செலவிடும் செலவினங்களை கண்காணிக்க விரைவில் திட்டமொன்றை வகுக்க வேண்டும்- என்றார். (அ)

# இந்திய மீனவருக்கு விளக்க மறியல்

மன்னார், ஜூலை 01

தலைமன்னார் கடற்பரப்பில் கைதான இராமேஸ்வர மீனவர்களை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என மன்னார் வடக்கு கடற்பரப்பில் வைத்து 8 இராமேஸ்வர மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளை தொடர்ந்து குறித்த மீனவர்களை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

இதன்போது, விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.


## INVITATION FOR BID 2025/08
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Docuement
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-01 To 2025-07-15** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T. P:021-205-8865, e-mail: pmdveps @ gmail. Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025-07-01 To 2025-07-15** |
| **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 2025-07-08** |
| **Closing and Opening of Bids** | **At 2.00 P.M on 2025-07-16** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025 / LAR/02 | Renovation of kalaimani Veethy, Irupalai Stage I | 2.54 | 63 | C9 or above (Highway) | 2,500.00 | 26,000.00 | 01.10.2025 | 49 |
| PSDG/NP/JAF/VEPS/2025 / LAR/03 | Renovation of kalaimani Veethy, Irupalai Stage II | 3.37 | 63 | C9 or above (Highway) | 2,500.00 | 34,000.00 | 01.10.2025 | 49 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
Valikamam East Pradeshiya Sabha,
Puttur.

01/07/2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ராஜதந்திரம் என்பது

தமிழர் அரசியல் சூழலில் பல விடயங்கள் அரைகுறையாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பது போன்றுதான் 'ராஜநத்திரம்' என்னும் சொல்லும் மிகவும் அரைகுறைாகவே புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அடிப்படையில் ராஜதந்திரம் என்பது அரசுகளுக்குரிய ஒரு கலையாகவே உலகில் கையாளப்பட்டு வருகிறது. ஆனால், புத்திசாலித்தனமுள்ள ஓர் அரசற்ற சமூகம் முயற்சித்தால் முடிந்தவரையில் ராஜதந்திரத்தை கையாள முடியும். வலிமையற்ற இனங்கள் தங்களின் புத்திசாலித்தனத்தின்மீது மட்டும்தான் நம்பிக்கை வைக்க வேண்டும்.

தமிழ் மத்தியதர வர்க்கம் தன்னை ஒரு படித்த சமூகமாக கற்பனை செய்து கொண்ட சமூகம். குறிப்பாக, யாழ்ப்பாண சமூகம். ஆனால், புத்திசாலித்தனம் என்பதை படித்து மருத்துவராகுதல், பொறியியலாளராகுதல், சட்டத்தரணியாகுதல் இல்லாவிட்டால் ஓர் அரசாங்க வேலையில் அமர்தல் என்னுமளவுக்கே மட்டுப்படுத்திக் கொண்ட சமூகம் என்றால் அதுவும் ஈழத் தமிழ் சமூகம் மட்டும்தான். தங்களின் அந்தஸ்து சார்ந்த படிப்புக்கு அப்பால் ஓர் அறிவுலகம் இருக்கிறது. அதனை கையாள்வதில்தான் ஓர் இனத்தின் வெற்றி தங்கியிருக்கிறது என்பதை இப்போதும்கூட, ஈழத் தமிழ் சமூகம் புரிந்து கொண்டதாக இல்லை.

ராஜதந்திரம் என்பது எதிரிகளை உற்பத்தி செய்யும் கலையல்ல மாறாக நேச சக்திகளை திரட்டிக் கொள்ளும் கலை. வேண்டுமானால் பலம் பொருந்திய நாடுகளுக்கு அவ்வாறான எதிரி மந்திரம் தேவைப்படலாம் - அது அவர்களின் ராஜதந்திரத்தையும் பாதுகாப்புக்கான கூட்டணிகளை இலகுபடுத்துவதற்கும் தேவைப்படலாம். ஆனால், தாங்கள் ஒடுக்கப்படுவதாக கருதும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு அல்லது தங்களுக்கு தேவையானவற்றை பெறுவதற்கு மற்றவர்களின் ஆதரவு தேவையென்னும் நிலையிலிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு கட்டாயம் நேச சக்திகளை திரட்டிக்கொள்ளத் தெரிய வேண்டும்.

ஆனால், ஈழத் தமிழ்ச் சூழலில் நடைபெறும் சிறிய எதிர்ப்பு ஆரப்பாட்டங்களிலிருந்து அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் வரையில் ராஜதந்திரத்தின் வாடையைக்கூட காண முடியவில்லை. உதாரணமாக அண்மையில், செம்மணியில் நடைபெற்ற கவனவீர்ப்பு நடவடிக்கையின்போது தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சென்றிருந்தனர். ஆனால், அங்கு அவர்கள்மீது எதிர்ப்பு காண்பிக்கப்பட்டது. இதேபோன்று தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள்மீதும் வெறுப்பு காண்பிக்கப்பட்டது.

உண்மையில், தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளையும் அந்த கவனவீர்ப்பு நடவடிக்கைக்குள் இணைத்துக் கொள்வதுதான் புத்திசாதுரியமானது. ஏனெனில், அவர்களாவே வலிந்து வருகின்றனர். அவர்கள் அங்கு தெரிவிக்கும் கருத்துகள் முக்கியமானது. ஏனெனில், தற்போது பொறுப்புக் கூறும் கடப்பாட்டை அவர்கள்தான் கொண்டிருக்கின்றனர். எவர் எதைக் கூறினாலும் இறுதியில் இலங்கை அரசாங்கத்துடன் நீங்கள் பேசியே ஆக வேண்டும். அதனைத்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் கூறிச் சென்றிருக்கிறார். ஏனெனில், ஐ. நாவும் அரசாங்களுக்குத்தான் அதன் பரிந்துரைகளை வழாங்க முடியும்.

ஈழத் தமிழர் அரசியலை ஆக்கபூர்வமாகவும் மக்களுக்கு பயனுள்ள வகையிலும் முன்னெடுக்க விரும்பினால் முதலில் எதிரிகளை உற்பத்தி செய்யும் அரசியலை கைவிடுங்கள். முடிந்தவரையில் உள்ளுக்குள்ளும் வெளியிலும் நேச சக்திகளை திரட்டிக் கொள்ளும் வாய்ப்புகளை தேடுங்கள். அதுதான், ராஜதந்திரத்துக்கான கதவுகளை திறக்கும் மந்திரம். உறவாடலும் உரையாடலும் இல்லாமல் ராஜதந்திரம் இல்லை.

# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா




*யாழ்ப்பாணம், ஜூலை 01*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக நிகழ்ந்தேறியுள்ளது. மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது. 2024ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தரும் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் யோ. நந்தகோபன் கலந்துகொண்டிருந்தார். சிறப்பு விருந்தினராக வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்களில் ஒருவரான எந்திரி ச. சர்வராஜா கலந்து கொண்டிருந்தார்.

இவ் விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 250 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரூபிகா அருந்தவம் ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இரண்டாம் இடத்தை பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிவிழி சுதாஜி வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மூன்றாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு வின்சற் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன், மன்னார் சேவியர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த றித்திக்கா அன்ரன் பிலிப்ஸ், யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் ஆகிய மூவரும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேய செயல்பாட்டாளருக்கான விருதை இம்முறை பாக்கியநாதன் சசிக்குமார், பாக்கியநாதன் ராஜ்குமார் ஆகிய இருவரும் பெற்றிருந்தார்கள். மரநடுகைப் பணியைச் சிறப்பாகச் செய்து வரும் சகோதரர்களான இருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவராவதானிகளாகவும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ள இவ்விழாவை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா தொகுத்து வழங்கினார். (அ)

# நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராக சத்தியவரதன்

*யாழ்ப்பாணம், ஜூலை 01*


நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராக தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ச. சத்தியவரதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உப தவிசாளராக செ.விமலதாஸ் தெரிவானார்.

13 உறுப்பினர்களைக் கொண்ட நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தெரிவு நேற்று நடைபெற்றது.

இந்த சபையில் தமிழ் அரசு கட்சிக்கு 6, ஈ. பி. டி. பி. 4, தேசிய மக்கள் சக்தி 2 தமிழ் தேசிய மக்கள் முண்ணணி சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

நேற்றைய தெரிவின் போது பார்வையாளர்களாக தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், சி. சிறீதரன், வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.சுகிர்தன், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜூலை 01 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 17
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**இடபம்**
பிள்ளைகளின் தனித் திறமைகளை கண்டறிவீர்கள். வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ள்வர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் செழிக்கும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்லும் கருத்துக்கள் சீரியசாக வாய்ப்பிருக்கிறது. மறைமுக அவமானம் வந்து நீங்கும்.

**கன்னி**
அனாவசிய செலவுகளை குறைக்கப் பாருங்கள். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**துலாம்**
எதார்த்தமாக பேசிக்கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**விருச்சிகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**தனுசு**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். எளிதில் யாரையும் நம்பி ஏமாறாதீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். கவனம் தேவைப்படும்.

**கும்பம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். தலைமையின் ஆதரவு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். துணிச்சலாக செயல்பட வேண்டும்.








# வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் பா. முகுந்தனும் கலந்து சிறப்பித்தனர். (எ)

# அபாயகரமான நிலையில் ரயில் கடவை உயிரிழப்புகளைத் தடுக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ். கொடிகாமம் பகுதியில் உள்ள ரயில் கடவை மிகவும் அபாயகரமான நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்

கொடிகாமம் இராமாவில் முருகன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள ரயில் கடவையே இவ்வாறு காணப்படுகின்றது.

குறித்த ரயில் கடவையில் இரு மருங்கிலும் தடுப்பு கம்பங்கள் காணப்படாத அதேவேளை கடந்த 2 மாதங்களுக்கு மேலாக கடவைக் காப்பாளர் கடமையில் ஈடுபடவில்லை எனவும் இதனால் பெரும் விபத்துக்கள் சம்பவித்து உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


இதேவேளை, மக்கள் மிகுந்த அச்சத்துடனேயே குறித்த ரயில் கடவையை கடக்கும் நிலை காணப்படுகிறது. விபத்து ஒன்று சம்பவிக்க இருந்த நிலையில் அப்பகுதியில் நின்ற மக்கள் விரைந்து செயல்பட்டதால் அது தடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி. பிரபாகரன், செ. மயூரன் ஆகியோரிடம் மக்கள் விடயத்தை தெரியப்படுத்தியிருந்தனர்.

இதையடுத்து பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரும் குறித்த ரயில் கடவையை பார்வையிட்டுள்ளனர்.

எனவே, புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாகக் கவனமெடுத்து விபத்து ஏற்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு முன் குறித்த கடவைக்கு காப்பாளரை கடமையில் ஈடுபடுத்தி விபத்துக்களை தடுத்து மக்களைப் பாதுகாக்குமாறும் மக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# திடீரென தீ பற்றியது மோ. சைக்கிள் யாழில் சம்பவம், குடும்பஸ்தர் காயம்



யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ். தென்மராட்சி மந்துவில் பகுதியில் நடு வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீ பற்றி எரிந்தது.

இந்தச் சம்பவம் வரணி வேம்பிராய் வீதியில் மந்துவில் மருதடி சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 02.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குடும்பஸ்தர் ஒருவர் வரணிப்பகுதியில் ஆலயம் ஒன்றுக்கு சென்று விட்டு வரணி வேம்பிராய் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை மந்துவில் பகுதியில் வீதிக்கு குறுக்காக மாடு ஒன்று சென்றது. மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாவதைத் தவிர்க்கும் நோக்குடன் திடீரென பிரேக் போட்டுள்ளார். இந்த நிலையில் மோட்டார் சைக்கிள் தீப்பற்றியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் குறித்த குடும்பஸ்தர் அணிந்திருந்த உடைகளிலும் தீ பற்றியதால் அவர் சிறிய எரிகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மோட்டார் சைக்கிள் தீயில் எரிந்து முற்றமாகச் சேதமடைந்தது. (எ)

# ஓமந்தையில் பொதுமகன்மீது இராணுவத்தினர் தாக்குதல்!

வவுனியா, ஜூலை 01

வவுனியா, ஓமந்தை பகுதியில் பொதுமகன் ஒருவர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காயமடைந்தவர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் அக்கிராம அமைப்புகளின் முக்கிய பதவிகளில் உள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கிராமத்தில் கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்றதால் அக்கிராமத்தில் புதிதாக நடமாடுபவர்களின் அடையாள அட்டையை கிராம அமைப்புகளின் உறுப்பினர்கள் பரிசோதித்து வருகின்றனர்.

அந்த வகையில் புதிதாக நடமாடிய ஒருவரை குறித்த பொதுமகன் வழிமறித்து அவரின் அடையாள அட்டையை காட்டுமாறு கோரியுள்ளார். எனினும் அவர் தான் இராணுவம் என தெரிவித்து அடையாள அட்டையை காட்ட மறுத்து சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் குறித்த பொதுமகன் நேற்று முன்தினம் மாலை வயல் காவலுக்காக சென்ற போது கொம்புவைத்தகுளம் இராணுவ முகாம் முன்பாக வழிமறித்த சிவில் உடை தரித்த 10இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பொதுமகன் மீது தாக்குதல் மேற்கொண்ட பின்னர் அவரை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு இராணுவ முகாமுக்குள் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் குறித்த பொதுமகன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிரிவினைவாதிகளை மட்டுமே சந்தித்துள்ளார் ஐ.நா. ஆணையாளர்!

## குற்றம்சாட்டுகிறார் சரத் வீரசேகர



**கொழும்பு, ஜூலை 01**

**இலங்கையில் சிங்கள இனத்துக்கே அநீதி இழைக்கப்பட்டுவருகின்றது எனவும், தமிழ்ப் பிரிவினைவாதிகளை மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்துள்ளார் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையென்பது சிங்கள, பௌத்த நாடாக இருந்தபோதிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது.

வடக்கில் 25 ஆயிரம் வரையிலான சிங்கள குடும்பங்கள் இருந்தன. இன்று ஒருவர்கூட இல்லை. மட்டக்களப்பிலும் சிங்களவர்கள் இல்லை.

கொழும்பில் முஸ்லிம் மற்றும் தமிழர்களே வர்த்தகத்தை நிர்ணயிக்கின்றனர். இதற்கு சிங்களவர்கள் தடை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இப்படி இருந்தும் சிங்களவர்களுக்கே இனவாத முத்திரைக் குத்தப்படுகின்றது.

அதிகாரத்துக்காக தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இனத்தைக் காட்டிக் கொடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இராணுவ அமைப்பு மற்றும் தேசியவாத அமைப்புகளுடன் சந்திப்பு நடத்தவில்லை. தமிழ்ப் பிரவினைவாதிகளை மட்டுமே சந்தித்தார்.

இரு தரப்புகள் இருப்பதை அரசாங்கம் அவருக்கு சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை- என்றார். (அ)

# மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்ய விசேட கவனம்

கொழும்பு, ஜூலை 01

மக்களின் புரதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கால்நடை உற்பத்திப் பொருட்களின் தேவை குறித்து விவசாயம், கால்நடை வளங்கல், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கண்டி, கட்டபேயில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் இது குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

மக்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் திறமையான சேவைகளை வழங்குவதற்காக, எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் திட்டங்களை திட்டமிட்ட திகதியில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். அதன்படி, எதிர்கால திட்டங்களுக்கான திகதிகளும் இதன்போது நிர்ணயிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துமிந்த திசாநாயக்கவின் மனு ஜூலை 14 இல் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 01

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தாக்கல் செய்த மனுவை ஜூலை 14 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் சார்பாக ஜனாதிபதி சட்டதரணி சம்பத் மெண்டிஸ் வாதங்களை முன்வைத்தார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய மூன்றாவது சந்தேக நபர் நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய நீதிபதி, அவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலம் தொடர்பான சாட்சியங்களை முன்வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி மே மாதம் 20ஆம் திகதி கண்டுபிடிக்கப் பட்டது, மேலும் இது தொடர்பாக இரண்டு பெண்களும் ஆணொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# நாட்டில் மீண்டும் மலேரியா தொற்று

கொழும்பு, ஜூலை 01

சமீபத்தில் தன்சானியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய 26 வயதுடைய ஒருவருக்கு மலேரியா இருப் பது கண்டறியப்பட்டு, தற்போது அவர் குருநாகல் போதனா வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கோகரெல்ல பொது சுகாதா ரப் பகுதியில் வசிக்கும் அந்த நோயாளி, சில நாட்களுக்கு முன்பு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து மருத் துவ உதவியை நாடினார். அதை தொடர்ந்து நடத் தப்பட்ட பரிசோதனை களில் அவருக்கு வெளிநாட் டில் மலேரியா தொற்று ஏற்பட்டது உறுதி செய்யப் பட்டது.

இலங்கை பல ஆண்டுகளுக்கு முன்பு மலேரியா இல் லாத நாடாக உத்தியோக பூர்வ மாக அறிவிக் கப்பட் டது. அதன் பின்னர், பதிவான அனைத்து வழக்குகளும் வெளி நாடுகளில் இருந்து பெறப்பட்ட தொற்றுகளால் கண்டறியப்பட்டுள்ளன. இருப்பினும், நாட் டில் தொடர்ந்து மலேரியா பரவுவதால் சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் உள்ளனர் - பாதிக்கப் பட்ட நபரைக் கடித்தால் நோயைப் பரப் பும் திறன் கொண்ட கியூலெக்ஸ் இனக்கொசுக் கள்குறித்து அதிகாரிகள் அவதானத்துடன் உள்ளனர்.

மலேரியா எதிர்ப்பு பிரசாரத்தின் அதிகாரிகள், உள்ளூர் பரவலைத் தடுக்க முழுமையான விசாரணையைத் தொடங்கியுள்ளனர். கண்காணிப்புக் குழுக்கள் தற்போது நோயாளியின் வீடு, கிராமம் மற்றும் மருத்துவ மனை வளாகங்களில் பாதிக்கப் பட்ட கொசுக்களின் எண்ணிக்கையைக் கண்டறிய ஆய்வு செய்து வருகின்றன. (அ)

# மின்தூக்கியில் சிக்கிக்கொண்ட 4 பாராளுமன்ற உறுப்பினர்கள்!

கொழும்பு, ஜூலை 02

கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செயலமர்வொன்றில் பங்கேற்கச் சென்று வெளியேறுகையில் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு லிப்டில் (மின்தூக்கி) சிக்கிக்கொண்டுள்ளனர்.

பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்று வந்த ஆய்வு நடவடிக்கையில் பங்கேற்ற எம்.பிக்கள் சமிந்த்ராணி கிரியெல்ல, சித்ரால் பெர்னாண்டோ, சதுர கலப்பத்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி எம்.பி. நிலந்தி கொட்டஹச்சி ஆகியோர் இந்த சம்பவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்கள் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலிருந்து மின்தூக்கியில் இறங்கிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக, ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சித்ரால் பெர்னாண்டோவிடம் கேள்வி எழுப்பியபோது, ஊழியர்கள் குழுவொன்று மின்தூக்கியிலிருந்து மீட்டபோது, அவர் உட்பட நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் லிப்டில் சிக்கிக் கொண்டதாகக் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து சமிந்த்ராணி கிரியெல்ல, எதிர்பாராத இந்த சம்பவத்தால் தான் மிகவும் சங்கடப்பட்டதாகக் கூறினார். (அ)

# ரூ.60 மில்லியன் பெறுமதியான பொருட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 01

60 மில்லியன் ரூபாவுக்கும் பெறுமதியான உயர் ரக இலத்திரனியல் பொருட்களை கடத்த முயன்ற பயணி ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 238 கையடக்க தொலைபேசிகள், ரப்லெட் கணினிகள் மற்றும் பிற இலத்திரனியல் பொருட்கள் அடங்கிய உபகரணங்களை தான் கொண்டு வந்த நான்கு பொதிகளில் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அவிசாவளையை சேர்ந்த 22 வயது தொழிலதிபரான குறித்த நபர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு டுபாயிலிருந்து நாட்டுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட நபரிடம் விமான நிலைய சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சில்லறை விலை குறிப்பிடாத உப்புப் பொதிகள் சந்தையில்

கொழும்பு, ஜூலை 01

சில இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர் அல்லது உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் சில்லறை விலை குறிப்பிடப்படாத உப்புப் பொதிகளை சந்தையில், விநியோகித்துள்ளதாக அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. அவ்வாறான உற்பத்திகளை கொள்வனவு செய்யவோ விற்பனை செய்யவோ வேண்டாம் என பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொருட்களை விநியோகிக்கும் இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளரின் சரியான தகவல்கள் மற்றும் விலை விபரங்கள் அடங்கிய முறையான விலைப்பட்டியல்களை தம்வசம் வைத்திருக்க வேண்டுமென வர்த்தகர்களுக்கு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# மத்துகம பிரதேச சபையின் அதிகாரம் சஜித் அணி வசம்

கொழும்பு, ஜூலை 01

களுத்துறை மாவட்டம் மத்துகம பிரதேச சபையின் அதிகாரத்தையும் தவிசாளர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி தம்வசப்படுத்தியது.

மத்துகம பிரதேச சபையின் தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது, பெரும்பான்மை ஆதரவை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதுடன் அதன் தவிசாளராக சுசுன் முனசிங்க தெரிவு செய்யப்பட்டார். (அ)

# ஹிருணிகாவுக்கு எதிரான விசாரணை டிசெம்பரில்!

கொழும்பு, ஜூலை 01

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் 14 சந்தேக நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 8 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2023 ஆம் ஆண்டு கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவில் வீதிகளை மறித்து போராட்டம் நடத்தியது தொடர்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இன்றைய விசாரணையின்போது, சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடிந்துவிட்டதாகவும், அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் கறுவாத் தோட்டம் பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தது.

அதன்படி, குறித்த வழக்கை டிசெம்பர் 8 ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உத்தரவிட்ட நீதிபதி, அடுத்த விசாரணையின் போது சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிமன்றத்திற்கு தெரிவிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

2023 ஆம் ஆண்டு கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பிற சந்தேக நபர்களுக்கு எதிராக பொலிஸாரினால் வழக்கு தொடரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியை தோண்டுவதால் இவர்கள் எதிர்பார்ப்பது என்ன?

## கேட்கிறார் அக்மீமன தயாரத்ன தேரர்

கொழும்பு, ஜூலை 01

**செம்மணி புதைகுழி விவகாரத்தை மீள தோண்டுவதன்மூலம் இவர்கள் எதிர்பார்ப்பது என்ன? புலிகளால் கொல்லப்பட்ட படையினரின் உடலங்கள்கூட அங்கு இருக்கக்கூடும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

யாழ். செம்மணி புதைகுழி தொடர்பில் தற்போது மீண்டும் பேசப்படுகின்றது. இவ்விகாரம் மீள தோண்டப்படுவதன் நோக்கம்தான் என்ன? இந்நாட்டில் போர் நிலவியது. பயங்கரவாதம் இருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர். படையினர் கொல்லப்பட்ட னர். பாரிய அழிவுகள் ஏற்பட் டன.

கடையில் படையினர்தான் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தினர்.

செம்மணி புதைகுழியில் இருப்பவை யாரினுடைய சடலங்கள்? பூநகரி மற்றும் ஆணையிறவின்போது படையினர், புலிகளால் கொல்லப்பட்டனர்.

சில உடல்களே கிடைக்கப்பெற்றன.

எனவே, இவை இராணுவத்தினருடையவை என எம்மால் கூறமுடியும். இப்பிரச்சினையை மீள தோண்டி எதிர்பார்ப்பதுதான் என்ன?

எனவே, அரசாங்கம் தீர்வை வழங்க வேண்டும்.

அவ்வாறு இல்லையேல் செம்மணி விவகா ரமும் யாசகரின் புண்கதை போல் ஆகிவிடும்.

தமிழ் அரசி யல்வாதிக ளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# இந்த ஆண்டு இதுவரை 16 டெங்கு மரணங்கள்!

கொழும்பு, ஜூலை 01

இந்த ஆண்டு இதுவரை 27,932 டெங்கு காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், இந்த காலகட்டத்தில் 16 இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் கூற்றுப்படி, 45 வீத டெங்கு காய்ச்சல் நோயாளிகள் மேற்கு மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். மேற்கு, கிழக்கு, சபரகமுவ மற்றும் தெற்கு மாகாணங்கள் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. டெங்கு காரணமாக பல குழந்தைகள் இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

டெங்கு மற்றும் சின்னம்மை பரவுவதைத் தடுக்க, நேற்று முதல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன கூறுகையில்-இந்த நடவடிக்கை 16 மாவட்டங்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படும். குறிப்பாக தென்மேற்கு பருவமழை அதிகரித்ததைத் தொடர்ந்து, நுளம்பு பெருக்கத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது-என்றார். (அ)

# கொள்கலன்கள் விடுவிப்பு விசாரணை அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 01

கொள்கலன்களை விடுவிப்பது தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அரசாங்கம் இந்தக் குழுவின் அறிக்கையை இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் மறைத்து வைத்திருந்ததாகவும், தான் இந்தக் குழுவின் அறிக்கையை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதன்போது கருத்து தெரிவித் தார்.

இதேவேளை, அவதானம் என்ற வகைப்பாட்டின் கீழ் கட்டாய சோதனைக்கு (ஸ்கான்) உட்படுத்த வேண்டிய சிவப்பு முத்திரை பதித்த 151 கொள்கலன்களில் 37 கொள்கலன்கள் எந்தவொரு சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டதாக குழுவின் அறிக்கையில் தெரியவந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சிவப்பு முத்திரை பதித்த கொள்கலன்களை விடுவிக்கும் போது கட்டாயமாக சோதனை (ஸ்கான்) செய்யப்படவேண்டியது அவசியமாகும். மேலும், அதிகாரிகள் சம்பந்தப்பட்ட 37 கொள்கலன்களும் சோதனை செய்யப்படவேண்டியவை என்ற குறிப்பை இணைத்துள்ளபோதிலும், அவைகள் எந்தவொரு சோதனையும் செய்யாமல் விடுவிக்கப்பட்டதையும் குழு அறிக்கை வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

சோதனை செய்யப்பட வேண்டிய 103 கொள்கலன்கள் எந்தவொரு சோதனையும் இன்றி விடுவிக்கப்பட்டதாகவும், கொள்கலன்களை விடுவிப்பதற்கான தீர்மானம் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி எடுக்கப்பட்டாலும், அந்த முடிவு எடுக்கப்படுவதற்கு முந்தைய நாள் ஜனவரி 17 ஆம் திகதி இரண்டு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார். (அ)

# வாகன விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியை உயிரிழப்பு !

கொழும்பு, ஜூலை 01

ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர், அவரது கெப் வாகனத்தின் கதவை திடீரென திறந்தபோது, மோட்டார் சைக்கிள் ஒன்று அதில் மோதி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் உயிரிழந்ததோடு, அவரது கணவன் காணமடைந்த நிலையில் சிகிச்சைக்காக ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பொகுணுவிட ஹங்ச உயன பகுதியில் வசித்து வந்த 62 வயதுடைய சுமணாவதி என்ற மூன்று குழந்தைகளின் தாயார் ஆவார்.

மோட்டார் சைக்கிள் பொகுணுவிட, பண்டாரகம நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, நிறுத்தப்பட்டிருந்த கெப் வாகனத்தின் வலது பக்க கதவை திடீரென திறந்ததால், மோட்டார் சைக்கிள் கைபிடிகப் வாகனத்தின் கதவில் மோதி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் பயணித்தவர் பின்னால் வந்த முச்சக்கரவண்டியில் மோதி உயரிழந்துள்ளார்.

ஓய்வுபெற்ற இராணுவ விசேட தேவையுடைய சிப்பாயும் முச்சக்கர வண்டி சாரதியு மான சந்தேக நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நேற்று முதல் ஜூலை 5 வரை தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜூலை 01

நாட்டில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் நுளம்பு பரவலை கட்டுப்படுத்துவதற்காக 17 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவால் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்று தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் அதிகரித்துள்ள நுளம்பு பரவலை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்று திங்கட்கிழமை முதல் ஜூலை 5 ஆம் திகதி வரையான 6 நாட்கள் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக பிரகடனப்ப டுத்தப் பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் டெங்கு அபாயமிக்க பகுதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 17 மாவட்டங்களை பிரதான கேந்திர நிலையமாகக் கொண்டு மேற்படி நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 111 பகுதிகள் இந்த நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை இரண்டு பிரிவுகளின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

இதன் முதலாம் கட்டம் நேற்று முதல் அடுத்த மாதம் இரண்டாம்திகதி வரை கொழும்பு, இரத்தினபுரி, திருகோணமலை, மாத்தளை, பதுளை, மொனராகலை, காலி, கல்முனை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும். இரண்டாம் கட்டம் கண்டி, கம்பஹா, குருநாகல், கேகாலை, கொழும்பு மாநகர சபை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் மாத்தறை மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்காக முப்படைகள் மற்றும் பொலிஸார் உட்பட 1100 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

# மின்சாரம் உற்பத்தியில் இலங்கை புதிய மைல்கல்!

கொழும்பு, ஜூலை 01

இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் மின்சார உற்பத்தியில் 72 வீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல்களிலிருந்து பெறப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த சாதனையை எட்டுவது இதுவே முதல் முறை என்று இலங்கை மின்சார சபையின் செய்தித் தொடர்பாளர் தம்மிக விமலவீர தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களிலிருந்து மின்சார உற்பத்தி கடந்த சில மாதங்களில் சுமார் 70 சத வீதத்தை எட்டியதாகவும் கூறிய அவர், எனினும் இந்த மாதம் அது 70 வீதத்தை விஞ்சியதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாடு முன்னர் கிட்டத்தட்ட 100 வீத நீர் மின்சாரத்தை நம்பியிருந்ததிலிருந்து இந்த மைல்கல் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கிறது.

தேசிய மின்சாரக் கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதிக்கத்தை மீட்டெடுப்பதற்கான இலங்கை மின்சார சபையின் நிலையான முயற்சிகளையும் இது பிரதிபலிக்கிறது என்றும் தம்மிக்க விமலவீர சுட்டிக்காட்டினார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் சாதகமான வானிலை, சூரிய சக்தி, காற்றாலை மற்றும் சிறு நீர் மின் திட்டங்களில் தொடர்ச்சியான முதலீடுகள் மற்றும் மேம்பட்ட மின் கட்டமைப்பு ஒருங்கிணைப்பு ஆகியவை இந்த சாதனைக்குக் காரணம்.

2030 ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 70 வீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அடைவதற்கான தேசிய இலக்கை நோக்கி இலங்கை நகர்ந்து வருவதாகவும் இலங்கை மின்சார சபையின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டார். (அ)

# பொலிஸ் பேச்சாளராக வூட்லர்!



கொழும்பு, ஜூலை 01

இலங்கை பொலிஸ்துறையின் புதிய பணிப்பாளராகவும், ஊடகப் பேச்சாளராகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்கவுக்குப் பதிலாக இவரது நியமனம் வந்துள்ளது.

இதேவேளை, பொலனறுவை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக புத்திக மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலின் பேரில் இந்த வழங்கப்பட்டுள்ள இந்த நியமனங்கள் உடனடியாக அமுலக்கு வந்துள்ளன.

இது தவிர இலங்கை பொலிஸ்துறையின் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத அகழ்வில் ஈடுபட்ட தேரர் உட்பட மூன்று பேர் கைது!

## இலங்கைப் பொலிஸ்துறையில் உயரதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 01

இலங்கை பொலிஸ்துறையின் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகாரிகள்-அவர்களின் புதிய நியமனங்கள் பின்வருமாறு:

1. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சி. குணரத்ன

பொலிஸ் கடேட் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளர் பதவிக்கு மாற்றப்பட்டார்.

மேலும், பொலிஸ் கடேட் பிரிவின் பணிப்பாளராகவும் அவர் தொடர்ந்து கடமைகளை மேற்கொள்வார்.

2. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பி.ஏ.இ. பிரசன்னா

கல்கிஸை பிரிவின் பொறுப்பதிகாரி பதவியிலிருந்து கெபிற்றிக்கொல்லாவ பிரிவின் பொறுப்பதிகாரி பதவிக்கு மாற்றப்பட்டார்.

3. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஏ.ஜே. குணசேகரன்

சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோக விசாரணைப் பணியகத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து கல்கிஸை பிரிவின் பொறுப்புக் காரி பதவிக்கு மாற்றப்பட்டார்.

04. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எச்.டபிள்யூ.ஐ.எஸ். முத்துமாலா

குற்றப் புலனாய்வுத் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பதவிக்கு மாற்றப்பட்டார்.

5. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்ஜி.வி.ஏ.கே.சி. ஆரியவன்ஸ

கம்பளை பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பதவிக்கு மாற்றப்பட்டார். (அ)

# மக்களை திசை திருப்புவதற்கு மகிந்த மீது குற்றச்சாட்டுக்கள்!

## சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 01

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளதை மறைப்பதற்காக அந்த விடயத்திலிருந்து கவனத்தை திசை திருப்புவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டுகளை உருவாக்கிவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள அவர், தனது குடும்பத்தவர்கள் கைது செய்யப்படுவதை தடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி பௌத்த பீடாதிபதிகளின் உதவியை நாடியுள்ளார் என வெளியான தகவல்களை நிராகரித்துள்ளார்.

இந்த தகவலை முற்றிலும் பொய்யானது என மறுத்துள்ள நாமல் ராஜபக்ஷ, கௌரவத்திற்குரிய மதத் தலைவர்களை அரசியலுக்குள் இழுக்கும் அவமானகரமான முயற்சி இது என தெரிவித்துள்ளார்.

தனது பதவிக்காலத்தின் முதலாவது ஆண்டில், தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ள அரசாங்கம், தற்போது தனது தோல்விகளை மறைப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அதனை மறைப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது குடும்பத்தவர்கள் கைதுசெய்யப்படுவதை தடுப்பதற்காக பௌத்தமத தலைவர்களின் உதவியை நாடியுள்ளார் என்ற கதையை பரப்பியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இது முன்னாள் ஜனாதிபதி மீதான தாக்குதல் மட்டுமல்ல, நமது மிகவும் மதிக்கப்படும் மத தலைவர்களை அரசியல் சேற்றில் சிக்கவைக்கும் முயற்சி என குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, இதனை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்கள் பொய்யானவை. அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்தை அரசியல் மயப்படுத்த முயல்கின்றது. எங்கள் குடும்ப உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்காக நீதித்துறையையும் அரசியல் மயப்படுத்துகின்றது என நாமல் கூறினார்.

நானும் எனது குடும்பத்தவர்களும் அச்சமின்றி தொடர்ச்சியாக அரசியல் நோக்கத்துடனான விசாரணைகளை எதிர்கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

### இலஞ்சம், ஊழல் பற்றி

# கடந்த 5 மாதங்களில் 2,000 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 01

இந்த வருடத்தில் கடந்த 5 மாதங்களில் இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக் குழு பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 138 என ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டு நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் உட்பட, தற்போது ஆணைக் குழுவிடம் உள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 221. இவற்றில், 224 முறைப்பாடுகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதோடு, 524 முறைப்பாடுகள் போதுமான ஆதாரங்கள் இல்லாததாலும், சட்டத்துக்குப் பொருத்தமற்றதாலும் விசாரணைக்கு உட்படுத்தாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 282 முறைப்பாடுகள் விசாரணைகளுக்காக வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு கடந்த 5 மாதங்களை உள்ளடக்கி தயாரித்து வெளியிடப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு மொத்தமாக 44 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் 25 சுற்றிவளைப்புகள் வெற்றியளித்ததோடு, 31 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5 மாதங்களில் இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தில் 42 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. முன்னாள் அமைச்சர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர், முதலீட்டு சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் மற்றும் 11 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 45 பேர் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஊழல் வழக்குகள் தொடர்பாக, முன்னாள் அமைச்சர் ஒருவர், சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், மாகாண முதலமைச்சர் ஒருவர் உட்பட 19 பேர் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர். 272 வழக்குகள் தற்போது நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# படகு விபத்துக்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட குழு!

கொழும்பு, ஜூலை 01

மீன்பிடி படகு விபத்துக்கள் தொடர்பான தொடர்ச்சியான சம்பவங்களை ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட விபத்துகளுக்கான காரணங்கள், அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து கவனம் செலுத்தும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மைய நாட்களில் ஏற்பட்ட மூன்று மீன்பிடி படகு விபத்துகளில் ஐந்து மீனவர்கள் இறந்தனர்.

மேலும் இருவர் காணாமல் போயுள்ளனர்.

தங்காலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பல நாள் மீன்பிடி படகு ஒன்று பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

நான்கு மீனவர்கள் டிங்கி படகின் உதவியுடன் தப்பியுள்ளனர்.எனினும், இரண்டு மீனவர் கள் காணாமல் போயுள்ளதாகவும், அவர்களில் ஒருவரின் உடல் நேற்று முன் தினம் பிற்பகல் கண்டெடுக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

பேருவளை, மொரகல்ல பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடி படகில் இருந்த இரண்டு மீனவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில், அவர்களின் சடலங்கள் நேற்று முன் தினம் காலை பெந்தர கடற்கரையில் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெவிநுவர பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற "தினேஷ் - 4" என்ற பல நாள் மீன்பிடி படகு வணிகக் கப்பலுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் காணாமல் போன மீனவரின் உடல் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை என்று கடற்படை தெரிவித்துள்ளது.

மீன்பிடிக் கப்பல் ஒரு வணிகக் கப்பலுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது, மேலும் அதில் இருந்த 6 மீனவர்களில் இருவர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.இந்த நிலையிலேயே மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத அகழ்வில் ஈடுபட்ட தேரர் உட்பட மூன்று பேர் கைது!

கொழும்பு, ஜூலை 01

ஹசலக பொலிஸ் பிரிவில் அம்பகஹபெலெஸ்ஸ பகுதியில் பழங்கால பொருட்களை பெறும் நோக்கில் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தேரர் ஒருவர் உட்பட சந்தேகநபர்கள் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹசலக பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்படி பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 24 வயதுடைய கல்வடுகொட பிரதேசத்தைச் சேர்ந்த தேரர் ஒருவரும் 39, 64 வயதுடைய செவனகல மற்றும் அம்பகஹபெலெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பில் ஹச லக பொலிஸார் மேலதிகவிசா ரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (அ)

# லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, ஜூலை 01

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் முன்னாள் பணிப்பாளர் ஜெனரல் ஜெயந்த எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில், இரண்டு நபர்களும் அரசாங்கத்துக்கு ரூ.1.7 மில்லியனுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவியேற்பின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரங்களுக்கு முதலீட்டுச் சபையின் நிதியைப் பயன்படுத்தியது தொடர்பானது வழக்கில் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு குற்றப்பத்திரிகைகள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டன.

குற்றப்பத்திரிகைகள் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதிவாதிகளுக்கு பிணை வழங்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி திருமலையில் தீப்பந்த போராட்டம்

திருகோணமலை, ஜூலை 01

**அரியாலை சித்துப்பாத்தி, செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு நீதி கோரி திருகோணமலை பத்தாம் குறிச்சியில் நேற்று முன்தினம் மாலை அணையா விளக்கு தீப்பந்த போராட்டம் நடைபெற்றது.**

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் அகழப்பட்டு வருகின்ற மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு அதற்கான நீதியை வலியுறுத்தி திருகோணமலை பட்டனத்தெரு மக்களால் குறித்த தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட சங்கங்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)


# பாத யாத்திரிகர்களுக்கு உணவு பொதி வழங்கல்

பொத்துவில், ஜூலை 01

திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தால் முன்னெடுக்கப்பட்ட கதிர்காம கந்தனை தரிசிக்க பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு சிறு அளவு மருத்துவ மற்றும் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதி உகந்தைமலை சிறீ முருகன் ஆலயத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. அடியார்களின் நிதி ஒத்துழைப்பு மற்றும் திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோரால் இந்தப் பொதி வழங்கப்பட்டது. (எ)



# கால்வாயை சுத்தம் செய்ய விவசாயிகள் கோரிக்கை



சம்மாந்துறை, ஜூலை 01

அம்பாறை, சம்மாந்துறை எஸ். 24 கால்வாயை சுத்தம் செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத்தை அடிப்படையாக கொண்டு தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து வரும் விவசாயிகளுக்கு எஸ். 24 கால்வாயில் குப்பைகளை கொட்டுவது பெரும் சவாலாக காணப்படுகிறது.

இந்தக் கால்வாயின் ஊடாக நாவக்காடு வட்டை, மீனாச்சி அடி வட்டை மற்றும் செம்மண் வட்டை போன்ற வயல் நிலங்களுக்கு நீரினை கொண்டு செல்வதற்காகவே இந்தக் கால்வாய் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கால்வாயின் ஊடாக விவசாயத்துக்குத் தேவையான நீர் வருகின்ற வேளைகளில் வீட்டுக் கழிவுகள் மற்றும் தோட்டக் கழிவுகள் போன்ற பல்வேறு கழிவுகள் நீரில் போடப்படுகிறது. இதனால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இப்பிரச்னைக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)


# எண்ணெய்க்காப்பு சாத்தல்: நாளை மகா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, ஜூலை 01

மட்டக்களப்பு அருள்மிகு சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக நடைபெற்றது.

இராமபிரானால் வழிபடப்பட்ட ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே கொண்ட ஆலயம் என பல்வேறு சிறப்புகளை கொண்ட மட்டக்களப்பு, மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை 02ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த 23ஆம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த நிலையில் 26ஆம் திகதி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.



தற்போது நடைபெற்றுவரும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 06 மணி வரையில் நடைபெறவுள்ளது. இரவு பகலாக பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வகையிலான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் முன்னெடுத்துள்ளது.

நாளை புதன்கிழமை காலை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (எ)

# போதைப்பொருள் பாவனையைத் தடுக்க பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு

சம்மாந்துறை, ஜூலை 01

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை தொடர்பில் நேற்று விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் எம். ஜனுபர் தலைமையில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம். நசாட், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ஜெயலத் ஆகியோரால் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வு செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.நௌபர், பிரதி அதிபர் எம். உவைஸ், சம்மாந்துறை பிரதேச செயலக போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். இக்ராம், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# காத்தான்குடியில் காய்த்துக் குலுங்கும் பேரிச்சம் பழங்களின் அறுவடை விழா

காத்தான்குடி, ஜூலை 01

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதான வீதியில், காய்த்துக் குலுங்கும் பேரிச்சம் பழங்களின் அறுவடை விழா நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

விவசாயிகளும், பொதுமக்களும் உற்சாகமாக கலந்து கொண்டு அறுவடை பணிகளில் ஈடுபட்டனர்.

வெப்பநிலை காரணமாக பேரீச்சம் பழங்கள் அதிகளவில் காயத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் அறுவடை காலம், இப்பகுதியில் பெரும் வர்த்தக உற்சாகத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் தூண்டும் முக்கிய கட்டமாகக் கருதப்படுகிறது.

குறித்த பேரீச்சம் மரங்களைக் காண உள்நாட்டு- வெளிநாட்டு




சுற்றுலாப் பயணிகள், காத்தான்குடிக்கு அதிகளவில் வருகை வது குறிப்பிடத்தக்கது. (எ)

# கொப்புரு மீன் கொம்பு குத்தியதில் மீனவர் பலி

வாழைச்சேனை, ஜூலை 01

மட்டக்களப்பு, வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்த நபரின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வாழைச்சேனை துறைமுகத்துக்கு கொண்டு செல் கடந்த 24 ஆம் திகதி வாழைச் சேனை துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க மூன்று பேருடன் சென்ற மீனவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மீன்பிடித்துக் கொண்டிருந்த போது வலையில் சிக்கிய கொப்புரு மீனை இயந்திரப் படகில் ஏற்றுவதற்கு முயற்சித்த போது மீனின் கொம்பு வயிற்றுப் பகுதியில் குத்தியதில் அவர் காயமடைந்தார்.

காயமடைந்த நபரை ஏனைய மீனவர்கள் கரைக்கு கொண்டு வரும் போதே அவர் உயிரிழந்தார்.

பிறைந்துறைச்சேனை - பாலை நகர் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்

# பொலிஸார் தடியடி நடத்தியதால் செர்பியாவில் பெரும் பதற்றம்!



பெல்கிரேட், ஜூலை 01

**செர்பியாவில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால் பெரும் பதற்றம் நிலவியது.**

மத்திய மற்றும் தென்கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு செர்பியா. இந்த நாட்டின் ஜனாதிபதியாக அலெக்ஸ்சாண்டர் வெக்னிக் செயல்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், ஜனாதிபதி அலெக்ஸ்சாண்டருக்கு எதிராக தலைநகர் பெல்கிரேட்டில் பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர். பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் கடந்த சில மாதங்களுக்கு முன் மாணவர்கள் தொடங்கிய போராட்டம் தற்போது பொதுமக்கள் மத்தியில் பரவியுள்ளது. அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதனால் அந்த நாட்டில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

(எ)

# கனடாவுடன் இனிமேல் வர்த்தக பேச்சு இல்லை

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூலை 01

கனடாவுடன் இனிமேல் வர்த்தக பேச்சு கிடையாது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்கள் மீது கனடா கூடுதல் வரியை விதித்த நிலையில் ட்ரம்பின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குறிப்பாக வர்த்தகம் மற்றும் இறக்குமதி விவகாரத்தில் ட்ரம்ப் கடும் கெடுபிடிகளை காட்டி வருகிறார். அமெரிக்காவின் அண்டை நாடுகளில் ஒன்றாக இருக்கக் கூடிய கனடாவுக்கும் வர்த்தக பேச்சு விவகாரத்தில் கடும் நெருக்கடி கொடுத்து வருகிறார். கனடாவை அமெரிக்காவின் மற்றொரு மாகாணம் என்று கூட பேசி அந்த நாட்டை ட்ரம்ப் சீண்டியிருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்கள் மீது கூடுதல் வரியை கனடா விதித்தது. இதனால், கடும் கோபமடைந்த ட்ரம்ப், கனடாவின் செயல் அப்பட்டமான விதி மீறல் என்றும் அந்த நாட்டுடனான வர்த்தக பேச்சு உடனடியாக இரத்து செய்யப்படுவதாகவும் கூறியுள்ளார். (எ)

# கனமழை, வெள்ளத்தால் பாகிஸ்தானில் 38 பேர் பலி

லாகூர், ஜூலை 01

பாகிஸ்தானில் கனமழை, வெள்ளத்தால் 38 பேர் பலியாகினர்.

இதேவேளை, கனமழை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் பருவமழை முன்கூட்டியே தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்படி, அந்த நாட்டில் கடந்த 26ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக கைபர் - பக்துவா, சிந்து, பஞ்சாப் உள்ளிட்ட மாகாணங்களில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

கனமழை காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி ஏற்கனவே 18 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், தொடர்ந்து பெய்துவரும் கனமழை, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது. மேலும், 63 பேர் படுகாயமடைந்துள்ளனர். கனமழை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க மீட்புக்குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# தீவிரவாத முகாம்களை அமைக்கும் பாகிஸ்தான்

ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய விமானப்படை குண்டு வீசி அழித்த தீவிரவாத முகாம்களை, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மீண்டும் அமைக்கும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் எல்லையில் லுனி, புத்வல், திபு போஸ்ட், ஜமில் போஸ்ட், உம்ரன்வாலி, சப்ரார் பார்வர்ட், சோட்டா சாக் மற்றும் ஜங்லோரா ஆகிய இடங்களில் செயல்பட்ட தீவிரவாத முகாம்களை இந்திய விமானப் படை விமானங்கள் குண்டு வீசி அழித்தன. தற்போது இந்த இடங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் தீவிரவாத முகாம்களை கட்டும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. ரேடார் மற்றும் செயற்கைகோள் கண்காணிப்பில் சிக்காத வகையிலும், தெர்மல் மாஸ்க் போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் இந்த கட்டடங்கள் கட்டப்படுகின்றன.


மேலும் புதிய தீவிரவாத முகாம்கள் மலைப் பகுதிக்குள்ளும், அடர்ந்த வனப்பகுதியிலும் கட்டப்படுகின்றன. இதனால் இங்கு நடைபெறும் பயற்சிகளை செயற்கைகோள் மற்றும் ட்ரோன்கள் மூலம் கண்டுபிடிக்க முடியாது.

தீவிரவாத முகாம்களை பெரிதாக கட்டாமல், ஐ.எஸ்.ஐ. ஆலோசனைப்படி சிறிய சிறிய முகாம்களாக 200 தீவிரவாதிகள் மட்டும் பயிற்சி பெறும் வகையில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா தாக்குதல் நடத்தினால், அதிகளவிலான உயிரிழப்பை தவிர்ப்பதற்காக, பல இடங்களில் சிறிய சிறிய முகாம்களாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தீவிரவாத முகாம்களின் பாதுகாப்புப் பணியை பாகிஸ்தான் இராணுவம் மேற்கொள்ளவுள்ளது. புதிய தீவிரவாத முகாம்கள் அமைப்பதில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. மற்றும் தீவிரவாத அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

(எ)

# “காஸாவில் ஒப்பந்தம் மேற்கொள்ளுங்கள்”

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூலை 01

“காஸாவில் ஒப்பந்தம் மேற்கொள்ளுங்கள். பணயக்கைதிகளை திரும்பப் பெறுங்கள்”- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த பேச்சுக்களில் முன்னேற்றம் காண வேண்டும் என்றும் ட்ரம்ப் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரைவில் வாஷிங்டன் செல்ல திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நெதன்யாகுவின் அமெரிக்கப் பயணத்துக்கான காரணம் குறித்து இதுவரை அதிகாரபூர்வ அறிக்கை எதுவும் வெளியாகவில்லை. எனவே, இந்தப் பயணம் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்காக இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ட்ரம்ப், “காஸாவில் ஒப்பந்தம் மேற்கொள்ளுங்கள். பணயக்கைதிகளை திரும்பப் பெறுங்கள்”என்று தனது சமூக ஊடகத் தளத்தில் நேற்று முன்தினம் பதிவிட்டுள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய பிரதமர் நெதன்யாகுவை வலியுறுத்துவதாக இந்தப் பதிவு அமைந்துள்ளது.


முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமையன்று, அடுத்த வாரத்துக்குள் காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படக்கூடும் என்று ட்ரம்ப் கூறினார். காஸாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு ட்ரம்ப் பலமுறை அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# 2026ஆம் ஆண்டு மாவோயிஸம் இந்தியாவிலிருந்து ஒழிக்கப்படும்

நிஜாமாபாத், ஜூலை 01

“2026ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்குள் மாவோயிஸம் மற்றும் நக்சல் சித்தாந்தத்திலிருந்து இந்தியாவை விடுவிப்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது” - என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சூளுரைத்தார். மேலும், துப்பாக்கிகளை கைவிட்டு சரணடையுமாறு மாவோயிஸ்ட்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தெலுங்கானாவின் நிஜாமாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா, “சரணடைய விரும்புவோர், வடகிழக்கில் ஆயிரக்கணக்கான நக்சல்கள் செய்தது போல் சரணடைந்து பிரதான நீரோட்டத்தில் இணையலாம். ஆனால், துப்பாக்கிகளை ஏந்துபவர்கள் தப்பிக்க மாட்டார்கள். கடந்த 18 மாதங்களில் 1,500இற்கும் மேற்பட்ட நக்சல்கள் சரணடைந்துள்ளனர். வடகிழக்கில் 10,000இற்கும் மேற்பட்ட முன்னாள் நக்சல்கள் வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளனர்” என்றார். (எ)



# சிறிய ரக விமானம் விழுந்து விபத்து!

## நால்வர் உயிரிழப்பு

மொஸ்கோ, ஜூலை 01

ரஷ்யாவில் சிறிய ரக பயிற்சி விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், நால்வர் உயிரிழந்தனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் கொலமா மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிய ரக விமானம் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 4 பேர் பயணித்தனர்.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டது. இதனால், விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் தீ பற்றி எரிந்தது. இந்தச் சம்பவத்தில் விமானத்தில் பயணித்த 4 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து தொடர்பில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - பங்களாதேஷ் ஒருநாள் போட்டி நாளை

கொழும்பு, ஜூலை 01

இலங்கை - பங்களாதேஷ் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நாளை 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இதனையடுத்து ஒருநாள் தொடர் தொடங்கவுள்ளது.

இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நாளை 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்த போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சரித் அசலங்க தலைமையிலான இந்த அணியில் ஹசரங்க, சமரவிக்கிரம போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை அணி விவரம் பின்வருமாறு:- சரித் அசலங்க, பதும் நிஸ்ஸங்க, அவிஷ்க பெர்னாண்டோ, நிஷான் மதுஷ்க, குசல் மெண்டிஸ், சதீர சமர விக்கிரம, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, துனித் வெல்லாலகே, வனிந்து ஹசரங்க, மஹேஷ் தீக்ஷனா, ஜெப்ரி வாண்டர்சே, மிலன் ரத்நாயக்க, தில்ஷான் மதுஷங்க, அஷித பெர்னாண்டோ, எஷான் மலிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)



## ஸ்மிரிதி மந்தனா வரலாற்று சாதனை

நாட்டிங்காம், ஜூலை 01

இந்திய அணியின் தொடக்க வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா வரலாற்று சாதனை ஒன்றை படைத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் போட்டியின் அனைத்து வடிவங்களிலும் சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை மந்தனா படைத்துள்ளார்.

இங்கிலாந்தின் நாட்டிங்காமில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரின் முதல் போட்டியில் அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

ஸ்மிரிதி மந்தனா 62 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 15 பௌண்ட்ரிகளுடன் 112 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

மகளிர் ரி - 20 போட்டியில் இந்தியாவுக்காக அதிக சதம் அடித்த 2ஆவது வீராங்கனை என்ற சாதனையையும் மந்தனா படைத்துள்ளார்.

உலகளவில் மகளிர் கிரிக்கெட்டின் அனைத்து வடிவங்களிலும் சதம் அடித்தவர்கள் வெறும் 5 வீராங்கனைகளே உள்ளனர். அந்த வரிசையில் இந்திய தொடக்க வீராங்கனை ஸ்மிரிதி மந்தனாவும் அந்த பட்டியலில் இணைந்துள்ளார். (எ)



## "நான் நிச்சயம் சவுதி சம்பியன் ஆவேன்"

ரியாத், ஜூலை 01

நான் நிச்சயம் சவுதி சம்பியன் ஆவேன் என்று கிறிஸ்ரியானோ ரொனால்டோ தெரிவித்தார்.

இதேவேளை, நடப்பு பிபா கிளப் உலகக் கிண்ணத் தொடரில் தான் பங்கேற்காதது ஏன் என்பதையும் உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 முதல் கிளப் அளவிலான உதைபந்தாட்ட போட்டிகளில் சவுதி அரேபியாவின் அல் - நசர் அணிக்காக விளையாடி வருகிறார் ரொனால்டோ. அண்மையில் 2027 வரையில் விளையாடும் வகையில் அவரது ஒப்பந்தத்தை அந்த அணி புதுப்பித்தது. இந்த நிலையில், அமெரிக்காவில் நடைபெறும் பிபா கிளப் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்காதது குறித்து ரொனால்டோ விளக்கமளித்துள்ளார்.

"கிளப் உலகக் கிண்ணத் தொடரில் விளையாட எனக்கு சில வாய்ப்புகள் வந்தன. ஆனால், அது அர்த்தமற்றது என நான் கருதினேன். அதனால் சிறந்த முறையில் ஓய்வு எடுக்க முடிவு செய்தேன். ஏனெனில், இந்த சீசன் மிகவும் பெரியது. உலகக் கிண்ணத் தொடரும் நடைபெறவுள்ளது. இதற்கு சிறந்த முறையில் தயாராக ஓய்வு அவசியம்.

நான் எனது கிளப் அணிக்காக மட்டுமல்லாது தேசிய அணிக்காகவும் விளையாட விரும்பினேன். அதனால், தான் நேஷன்ஸ் லீக் தொடரிலும் விளையாடினேன். வேறு எதற்கும் நான் செவிகொடுக்கவில்லை. அல்-நசர் அணிக்காக பிரதான கிண்ணத்தை வெல்ல வேண்டும் என விரும்புகிறேன். இது நான் நேசிக்கின்ற ஓர் அணி. அதனால் தான் இப்போது எனது ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நிச்சயம் நான் சவுதி சம்பியன் ஆவேன்" என ரொனால்டோ கூறியுள்ளார். (எ)

நடுவர் மீது விமர்சனம்:

## மே. இ. தீவு அணி தலைமை பயிற்சியாளருக்கு அபராதம்

டுபாய், ஜூலை 01

நடுவரின் தீர்ப்பை விமர்சித்த மேற்கு இந்திய தீவுகள் அணியின் தலைமை பயிற்சியாளர் டேரன் சமிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது டெஸ்ட் போட்டி பிரிட்ஜ்டவுனில் கடந்த 25ஆம் திகதி தொடங்கியது.


இதில், அவுஸ்திரேலிய அணி 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

முன்னதாக இந்தப் போட்டியின் நடுவர்கள் வழங்கிய சில முடிவுகள் மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிராக அமைந்தன. இது கிரிக்கெட் உலகில் பேசு பொருளானது. இது குறித்து அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் டேரன் சமி வெளிப்படையாக விமர்சித்திருந்தார். இது ஐ.சி.சி. விதிமுறையை மீறிய செயலாகும்.

இதனால் டேரன் சமி மீது சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் (ஐ.சி.சி.) குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. டேரன் சமியும் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார்.

இதனால் அவருக்கு போட்டிக் கட்டணத்திலிருந்து 15 சதவீதம் அபராதமும் ஒரு தகுதி இழப்பு புள்ளியும் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது. (எ)





## ஜெய்டன் சீல்ஸுக்கு ஐ. சி. சி. அபராதம்!

பார்படாஸ், ஜூலை 01

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜெய்டன் சீல்ஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி பார்படாஸில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸின்போது அவுஸ்திரேலிய வீரர் பட் கம்மின்ஸ் விக்கெட்டை வீழ்த்திய ஜெய்டன் சீல்ஸ், கம்மின்ஸை நோக்கி ஆடுகளத்திலிருந்து வெளியேறு என்ற ரீதியில் சைகை காண்பித்தார். இதுதொடர்பில் போட்டி நடுவரிடம் புகார் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐ.சி.சி. நடத்தை விதிமுறையின்படி ஜெய்டன் சீல்ஸுக்கு போட்டிக்கான ஊதியத்திலிருந்து 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

முதல் இன்னிங்ஸில் ஜெய்டன் சீல்ஸ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார். மேலும், கடந்த 2 ஆண்டுகளில் ஜெய்டன் சீல்ஸ் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது 2ஆவது முறை என்பதால் அவருக்கு 2 தகுதி இழப்புப் புள்ளிகளும் அபராதமாக வழங்கப்பட்டுள்ளன. (எ)

## பங்களாதேஷ் அணி தலைவர் ஷாண்டோ இராஜினாமா

கொழும்பு, ஜூலை 01

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து பங்களாதேஷ் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ விலகியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி தொடரையும் 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனையடுத்து அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதாக நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "பங்களாதேஷ் டெஸ்ட் அணி தலைவர் பொறுப்பிலிருந்து விலகியது என்னுடைய தனிப்பட்ட முடிவாகும். கிரிக்கெட்டின் 3 விதமான வடிவங்களுக்கு (டெஸ்ட், ஒருநாள், ரி - 20) 3 அணித் தலைவர்கள் என்ற நடைமுறை சரி என்று எனக்குத் தோன்றவில்லை"- என்றார். தற்போது பங்களாதேஷ் அணியின் ஒருநாள் போட்டிக்கான அணித் தலைவராக மெஹதி ஹசன் மிராஸும், சர்வதேச ரி -20 அணியின் தலைவராக லிட்டன் தாஸும் செயல்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார திருத்த...

சட்டமூலத்தின் சில பிரிவுகள், அரசியலமைப்பின் சில சரத்துக்களை மீறுவதாக அமைந்துள்ளது.

சில சரத்துக்கள் தெளிவின்றி இருப்பதாலும் அவற்றில் திருத்தங்கள் தேவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சியில்...

மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த கஞ்சாவானது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (அ-05)

## எரிபொருள்...

இதேவேளை, சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலையிலும் (325 ரூபாய்), 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையிலும் (341 ரூபாய்), எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக...

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உப்பு, தற்போது சந்தையில் சுமார் 320 ரூபாய்க்கு விற்கப்படுவதாக சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதன்படி, உப்பு இறக்குமதி மூலம் பல பில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்புகள் மேலும் தெரிவித்தன. (அ)

## 3 வயது குழந்தை...

ஆண் குழந்தையையே பஸ் மோதியுள்ளது.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆரையம்பதி, முதலாம் பிரிவு, காளி கோவில் வீதியைச் சேர்ந்த பிரகாஷ் றிகோஸ்வரன் (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்தது. சடலத்தை ஆரையம்பதி வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், பஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இசைப்பிரியா...

அந்தப் பதிவில் முறைப்பாட்டு இலக்கம் மற்றம் முறைப்பாட்டின் தற்போதைய நிலை என்பவற்றையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் அதிகாரபூர்வ சட்ட வழிகள் மூலம் முறையாக விசாரிக்கப்படுவதையும், புறக்கணிக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதே எனது முன்னுரிமை. அதிகாரிகள் உடனடியாகவும் முழுமையாகவும் தொடர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ள அவர், இந்த வழக்கு முன்னேறும்போது தொடர்ச்சியான ஆதரவு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக, உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் சரணடைந்த முன்னாள் போராளி இசைப்பிரியா, புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் உட்பட பலர் கொல்லப்பட்டமை குறித்த போர் குற்றச்சாட்டு விசாரணைகளை கோரி குறித்த சட்டத்தரணி பொலிஸ் மா அதிபருக்கு மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## குறி சொல்லும்...

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

மரண விசாரணைகளின்போது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த குடும்பஸ்தர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார் என்ற விடயம் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அவர் நீர் வெறுப்பு நோய்க்கு உள்ளாகி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவரது உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலத்தை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நாய் மேலும் சிலருக்கு கடித்ததாக தெரியவந்துள்ள நிலையில் அவர்களை பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-05)

## பொய் கூறுகிறது...

தொழில்முனைவோரின் சொத்துகளை ஏலம் விடுவது அவர்களின் வணிக முயற்சிகளை சரிவுக்கு இட்டு செல்கின்றன.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்கிறது. வேலையின்மையை அதிகரிக்கச் செய்கின்றன. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அதனைக் குறைக்கிறது.

முந்தைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோரை ஏமாற்றியே வந்துள்ளன.

தேர்தலை நோக்கமாகக் கொண்டு பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தனர்.

தற்போது, இந்த அரசாங்கமும் முந்தைய அரசாங்கத்தை போலவே எந்த சாதகமான தீர்வுகளையுமோ அல்லது மாற்றுத் தீர்வுகளையோ பெற்றுக் கொடுக்கவில்லை - என்றார். (அ)

## செம்மணி...

பெற்றுத் தருமாறு கூட இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா. ஆணையாளரிடம் கேட்டிருந்தோம்.

செம்மணியில் போராட்டம் இடம்பெற்றபோது நானும் அங்கு சென்றிருந்தேன். அங்கு பத்து முதல் பதினைந்துக்கு இடைப்பட்டோர் எங்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

நான் முதலில் சென்று அந்த மக்களைச் சந்தித்தேன். அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அங்கு திட்டமிட்டு ஏவப்பட்டிருக்கின்ற கும்பலால் ஏற்படுத்தப்பட்ட செயற்பாட்டினாலே அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நிச்சயமாக அங்கிருக்கும் மக்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை. மக்கள் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவுமில்லை.

மக்களுடைய பிரச்னைகளை சென்று பார்ப்பதற்கு நான் சென்றேன். இவ்வாறான ஒரு பிரச்னையை பார்ப்பதற்கு ஒரு அரசாங்கத்தினுடைய அமைச்சரவை அமைச்சர் வருகை தருவது என்பதே அந்தப் பிரச்னைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதாகும் என அங்குள்ள மக்கள் இன்று கூறுகின்றார்கள்.

அந்த அங்கீகாரத்தை குழி தோண்டி புதைக்கின்ற வகையில் அரசியல் சாக்கடையில் இருக்கின்ற ஒரு சில அரசியல்வாதிகளினுடைய செயற்பாடே அந்த அசம்பாவிதத்திற்கு காரணம்- என்றார். (அ)

## 3 சந்தேகநபர்கள் கைது

வவுனியா, ஜுலை 01

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, கற்குழி பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்தவர்கள் எரிவாயு சிலிண்டர். லப்ரொப், ரப், கைபேசி, தொலைபேசி, தொலைகாட்சி போன்ற பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன.

இவற்றில் தொலைபேசி, லப்ரொப் என்பன தேக்கவத்தை விளையாட்டு மைதானத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, வவுனியா குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த டீ சில்வா தலைமையிலான குழுவினர் விசாரணையை முன்னெடுத்தனர்.

இதன்போதே மூவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன. (ஐ)

## அதிகாரத்து...

அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் மீறியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கூறத்தொடங்கிய பொய்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரையும் தொடர்ந்து அவற்றின் மூலம் மக்களை ஏமாற்றியிருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் என்ற கட்சி அரசியல் விலைமாதுவாகியுள்ளது.

அதிகாரத்துக்காக அனைத்தையும் காட்டிக் கொடுக்கும் நிலைப்பாட்டையே இந்த அரசாங்கம் பின்பற்றுகின்றது.

அன்று தொண்டமான் ஊழல்வாதியென்று கடுமையாக விமர்சித்தனர். ஆனால், நுவரெலியாவில் ஆட்சியமைப்பதற்கு தொண்டமான் குழுவின் ஆதரவைப் பெற்றுக் கொண்டனர்.

இதேபோன்றுதான் தெற்கு மற்றும் கிழக்கில் ரிஷாத் பதியுதீன் மற்றும் பொதுஜன பெரமுனவின் ஆதரவையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவற்றுக்கு அப்பால் ஒரு படி மேல் சென்று குண்டர்களை அனுப்பி அராஜகத்திலும் ஈடுபடுகின்றனர். பாதாள உலகக் குழுக்களை முற்றாக ஒழிப்பதாகக் கூறினர். ஆனால் இன்று பாதாள உலகக் குழு அரசாங்கத்துக்கு உதவுகிறது.

இவ்வாறு அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பதாலேயே தேசிய மக்கள் சக்தியை அரசியல் விலைமாது என்கிறோம். சபை உறுப்பினர்களைத் தவிர அவற்றுக்குள் பிரவேசிப்பதற்கு வேறு யாருக்கு அதிகாரமிருக்கிறது? ஊடகங்களுக்கு கூட அனுமதி மறுக்கப்படும் இடங்களில் தேசிய மக்கள் சக்தியின் குண்டர் கும்பல் நுழைந்து அராஜகமாக செயற்படுகிறது.

முடிந்தால் இவர்களை கைது செய்யுமாறு ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு சவால் விடுக்கின்றோம்.

அவர்களால் பொது சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கு விரோதமாக செயற்பட்டிருக்கின்றனர். 1988, 1989களில் காணப்பட்ட வன்முறை கலாசாரத்தையே தற்போதும் பின்பற்ற முயற்சிக்கின்றனர். வன்முறை கலாசாரம் என்பது ஜே. வி. பியின் மரபணுவில் ஊறிய ஒன்றாகும்.

எனவே, ஜே.வி.பி.யையும் வன்முறையையும் பிரிக்க முடியாது. வெலிகம பிரதேச சபைக்குள் நுழைந்து அராஜகத்தில் ஈடுபட்ட குண்டர் கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதையே எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதிகாரத்துக்காக இவ்வாறு கீழ்த்தரமாக செயல்பட வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்- என்றார். (அ)

## எதிர்கால...

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அரச நிதி மூலோபாய கூற்று வெளிப்படுத்தல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் காலத்தில் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மாறாகவே இந்த அரசாங்கம் தற்போது செயற்படுகிறது. ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வெளியேறுவோம். ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை நாட்டுக்கு பொருத்தமில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் குறைவில்லாமல் செயற்படுத்துகின்றார்கள். கட்டம் கட்டமாக வரிகளை அதிகரிக்கிறார்கள்.

தனிமனித பொருளாதார மேம்பாட்டை அதிகரிப்பதற்கும் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் இதுவரையான காலப்பகுதியில் என்னென்ன செயற்றிட்டங்கள் முன்னெடுத்துள்ளது? சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையை பலப்படுத்த அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளது? ஆட்சிக்கு வந்ததன் பின்னரும் கடந்த காலங்களை போன்று 75 ஆண்டுகால அரசியல் கட்டமைப்பை விமர்சிக்கிறார்கள். ஆனால் எதிர்கால திட்டமிடல் பற்றி ஏதும் எவரும் இலக்கிடப்பட்ட வகையில் எவரும் குறிப்பிடுவதில்லை.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அண்மையில் 650 மில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார். ஜனாதிபதி குறிப்பிடுகிறார் 4.6 பில்லியன் டொலர் முதலீடு என்று ஆனால், முதலீட்டு சபையின் தலைவர் "சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு இன்னும் இறுதி தீர்வு எடுக்கப்படவில்லை" என்று குறிப்பிடுகிறார். ஆகவே, யார் குறிப்பிடுவது உண்மை? கனவுலகில் இருந்துகொண்டா வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான திட்டங்களை வகுக்கின்றீர்கள்?

வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டுக்கொள்ளும் நிலையில் தேசிய தொழில் துறைகள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. வெளிநாட்டு முதலீட்டுத் திட்டத்தை டிஜிற்றல் மயமாக்குவதாக குறிப்பிட்டீர்கள். அதற்கு என்ன நடவடிக்கைகளை இதுவரை எடுத்துள்ளீர்கள்?

அரசாங்கத்தின் குறைபாடுகளை மறைத்துக்கொள்வதற்காகவே அரச அதிகாரிகள் இன்று நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அரச சேவையின் மீது அரசாங்கத்துக்கு நம்பிக்கை கிடையாது. இதனால்தான் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி அமைச்சில் முக்கிய பதவிகள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரச சேவையை இல்லாதொழிக்காதீர்கள்.

அரச நிதியை கொள்ளையடிப்பதற்காகத்தான் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது என்று குற்றஞ்சாட்டினீர்கள். ஆனால், இன்று அரிசி இறக்குமதி செய்கின்றீர்கள். உரம் இல்லாத காரணத்தால் விவசாயிகள் இன்று வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். இதனைப் பற்றி பேசுவதற்கு இன்று யாரும் இல்லை. வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு அரசாங்கத்திடம் உள்ள திட்டம் என்ன?

அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து கொண்டு கைதுகளை முன்னெடுக்காதீர்கள். வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு எவ்வித திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மக்களின் காணிகளில் உள்ளது கீரிமலை ஜனாதிபதி மாளிகை!

## விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 01

**கீரிமலையிலுள்ள ஜனாதிபதி மாளிகை பொதுமக்களின் இடங்களைக் கைப்பற்றிச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது,

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள இடத்துக்கு 8 பேர் உரிமை கோரியுள்ளனர்.

அதனால் அந்த மாளிகையை முதலீட்டாளர் களுக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சனையை முழுமையாகத் தீர்த்த பின்னரே மாளிகையை முதலீட்டாளர்களுக்கு வழங்கமுடியும்.

காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கிப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவருவதா? அல்லது வேறு வழிகளில் தீர்ப்பதா? என்பது தொடர்பாக ஆலோசித்து வருகின்றோம். பிரச்னையை விரைவாகத் தீர்த்து மாளிகையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த மாளிகையை ஒரு போதும் உபயோகிக்கமாட்டார். இந்த மாளிகை மட்டுமல்ல நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளையும் அவர் உபயோகிக்கமாட்டார்- என்றார். (அ)

# ஷிரந்தி கைதாகுவதை தடுக்க மகிந்த முயற்சி?

## மறுக்கிறது மொட்டு கட்சி

கொழும்பு, ஜுலை 01



ஷிரந்தி ராஜபக்ஷ கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு மகாநாயக்க தேரர்களின் உதவியை மகிந்த ராஜபக்ஷ கோரினார் என வெளியாகும் தகவலை பொதுஜன பெரமுன கட்சி முற்றாக நிராகரித்துள்ளது.

'இது முற்றிலும் போலியான தகவலாகும். ஆளுங் கட்சியால் திட்டமிட்ட அடிப்படையில் பரப்படும் வதந்தியாகும்." - என்று மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். (அ)

# 2 வாரங்களில் 30 பேர் கைது!

கொழும்பு, ஜுலை 01

நாட்டின் கடற்பிராந்தியங்களில் கடந்த இரண்டு வாரங்களில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை, இலங்கை கடலோர காவல் படை மற்றும் மீன்வள மற்றும் நீர்வளத் திணைக்களம் இணைந்து முன்னெடுத்த முற்றுகையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, பத்து டிங்கிப் படகுகள், தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட முப்பது சந்தேகநபர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# வெளிநாட்டவர் உட்பட மூவரை தாக்கிய இனம் தெரியாத குழு!

கொழும்பு, ஜுலை 01

பண்டாரவளை - எல்ல பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றுக்கு அருகில் வெளிநாட்டவர் உள்ளிட்ட மூவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரும் இலங்கையர்கள் இருவரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின்போது காயங்களுக்கு உள்ளான மூவரும் தியத்தலாவை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக எல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் அடையாளந் தெரியாத குழுவொன்றினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (அ)

# சக்தி வாய்ந்த வெடிமருந்தை லொறியில் கடத்தியவர் கைது!

கொழும்பு, ஜுலை 01

ஹபரணை - திருகோணமலை பிரதான வீதியில் ஊ 4 ரக வெடிமருந்துகளை லொறியில் கடத்திச் சென்ற சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் ஹபரணை - திருகோணமலை பிரதான வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த லொறி ஒன்றை நிறுத்திச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது லொறியில் இருந்து 156.07 கிராம் நிறையுடைய சி-4 ரக வெடிமருந்துகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சி-4 ரக வெடிமருந்துகள் மிகவும் சக்தி வாய்ந்த வெடிமருந்துகளில் ஒன்று என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடிமருந்துகளை சந்தளாயிலிருந்து தென் பகுதிக்கு கடத்திச் செல்ல திட்டமிட்டுள்ளதாக சந்தேக நபரிடம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# கொள்கலன்களை பற்றிக் கூற எனக்கு பயமாக இருக்கின்றது!

## சபையில் அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, ஜுலை 01

கேள்விக்குரிய 323 கொள்கலன்களை விடுவிப்பது தொடர்பாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கொள்கலன்களை விடு விப்பது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,என்னை பதவி நீக்க வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த கொள்கலன் களுக்குள் என்ன இருந்தது என்ற பட்டியலை நான் உங்க ளுக்கு வழங்க முடியும்.

அது எங்கே போனது? எந்த நாட்டிலிருந்து வந்தது? என கூறமுடியும். ஆனால் அவர் கள் என்னை எம்.பி. இருக்கையிலிருந்து நீக்கமாட்டார் கள் என்பதை எனக்கு நிரூபிக்கச் சொல்லுங்கள். அதை நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன்.

இல்லையெனில், நான் வேறு நாட்டுக்கு சென்று அதை வெளியிடுவேன். அந்த கொள்கலன்களுக்குள் என்ன இருந்தது என்பதை நான் பயமின்றி கூறுவேன். முழு விவரங்களையும் என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும்.

ஆனால் எனக்கு பயமாக இருக்கிறது. ஆனால் நான் கொல்லப் படுவேன் என்று பயப்படவில்லை. அவர் கள் என்னை மீண்டும் மீண்டும் தேவையற்ற வழக்குக ளில் இழுக்கிறார்கள்.

இப்போது அவர்களிடம் பொலிஸின் அதிகாரம் உள்ளது. இப்போது அவர்கள் என்னை எம். பி. பதவியி லிருந்து அகற்றுவதன் மூலம் உண்மை வெளிவருவதைத் தடுக்க முயற்சிக்கிறார்கள்-என்றார். (அ)

# சிறுமி துஷ்பிரயோகம் 51 வயதான நபர் கைது

கொழும்பு, ஜுலை 01

51 வயதுடைய திருமணமான ஒருவர் ஐந்து வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டதாக குருவிட்ட பொலிஸார் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

குருவிட்ட பொலிஸ் பிரிவின் தேவிபஹல பகுதியைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு நிரந்தர வேலை இல்லை, கூலி வேலை செய்து தனது வாழ்க்கையை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பக்கத்து வீட்டில் அவர் வசித்து வருகிறார்.

சிறுமி தனது வீட்டில் தனியாக இருந்தபோது பாலியல் துஷ்பிரயோகம் நடந்ததாக சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபர் குருவிட்ட பொலிஸ் மகளிர் பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளார். (அ)

# மன்னார், கொக்குத்தொடுவாய் போல் செம்மணியையும் மறைக்கமுடியாது!

## கூறுகிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜுலை 01

மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதபுதைக் குழிகள் கைவிடப்பட்டதைப் போன்று, செம்மணி விடயங்களை மூடி மறைக்க, ஒருபோதும் அனுமதிக்கப் போவ தில்லை என இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் மனிதப் புதைகுழிகள் மிக முக்கிய பங்கை வகிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான, உண்மைகள் கண்டறியப்பட வேண்டுமாயின், குறித்த மனிதப் புதைகுழிகளை, சரியான முறையில் ஆய்வு செய்ய வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியும், வடக்கு கிழக்கில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஏனைய மனிதப் புதைகுழிகளும், சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையுடன், சரியான முறையில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.